# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார் வணிக மாத இதழ்

Volume: 13 Issue : 09 DECEMBER 2024 Tamil & English Monthly Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE



VH VEDHAVALLI HOLIDAYS

DUBAI SHOPPING FESTIVAL





5 days

13th JAN 2025

99430 31237

Vedhavalli Holidays

82, Kamarajar Salai, Alangar Theatre Opp, Madurai-09.




Program on
**Digital Crime Alert**
by Cyber Crime Police - Date: 03.12.2024



Program on
**Income Tax Discussion**
by IT Officers - Date: 06.12.2024



Special Meet with
**Dr. Kamlesh Joshipura**
Date: 19.11.2024




SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536





METRO

அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

**மெட்ரோ ஷூ மார்ட்**

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

**PH : 23322364, 2331297, 4382343**



TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer :

**Sri Balameenakshi Aqua Pumps**

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems

124, West Masi Street, Near Murugan Temple, Madurai - 625 001. Cell : 93616 25696

**H.O. : Madurai Pipes**

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 4378524, Cell : 94437 95317
B.O. : 32A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014. Cell : 99946 57349




KARPAGAM GROUP OF COMPANIES
SINCE 1985

# Karpagam

## Auto Group of Companies

**Dealers in Automobile Spare Parts**

53, 56, 67, Tamil Sangam Road, Madurai - 625 001. Tamilnadu
Ph. 0452-4375875, 2342267, 2340067 | email : stores@karpagamauto.com

# தலைவர் அறிக்கை

அஸ்கிதெங்கோ மொன்னு பொறெ

**நமஸ்கார்...**

K.K. தினேஷ், தலைவர்

தமிழ்நாட்டில் வசிக்கும் நமது ஸௌராஷ்ட்ர சமுதாய மக்களைக் காண 2009ல் அப்போதைய குஜராத் முதல்வராக இருந்த நமது பாரதப்பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் மதுரை வருகைக்கு முக்கியக் காரணகர்த்தாவாக இருந்த குஜராத் மாநில ராஜ்கோட் ஸௌராஷ்ட்ர பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் டாக்டர். கமலேஷ் ஜொஷிபுரா அவர்கள் முதல் முறையாக நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் புதிய அலுவலகத்திற்கு தம்பதியராக வருகை தந்தது பெருமையாக கருதுகிறோம்.

இந்த சந்திப்பில், தொழில் வளர்ச்சி மற்றும் கலாச்சாரப் பரிமாற்றம் சம்பந்தமான உரையாடல் நடைபெற்றது. திருமதி. பாவ்னா ஜொஷிபுரா அவர்கள் சேம்பரின் கோரிக்கைகளை நிறைவேற்ற உதவி செய்வதாகத் தெரிவித்தது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

GST கவுன்சில் வணிகப் பயன்பாட்டிற்கான கட்டிட வாடகையில் 18 சதவீத வரி (RCM முறையில்) விதித்துள்ளதை திரும்பப்பெறக்கோரி 29.11.2024 அன்று மதுரையில் அனைத்து வணிகர்களின் கூட்டமைப்பு நடத்திய போராட்டத்திற்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், நமது அங்கத்தினர்களின் விருப்பத்திற்கிணங்க ஆதரவளித்திருந்தது. நமது கோரிக்கையை GST கவுன்சில் பரிசீலிக்கும் என்று நம்புகிறோம்.

நமது நாட்டின் பொருளாதாரத்தை கட்டுப்படுத்தி வரும் இந்திய ரிசர்வு வங்கியின் புதிய கவர்னராக வருவாய்துறை செயலராக இருந்த திரு. சஞ்சய் மல்ஹோத்ரா அவர்கள் பொறுப்பேற்றுள்ளார். அடுத்த மூன்றாண்டுகளுக்கு இவர் இந்த பொறுப்பு வகிப்பார். அவருக்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. இவர் தொழில்முனைவோர்களுக்கு பயனளிக்கும் வகையில் செயல்படுவார் என்று எதிர்பார்க்கிறோம்.

சேம்பர்-ல் இந்த மாதம், சைபர் கிரைம் விழிப்புணர்வு மற்றும் வருமான வரி புதிய தகவல்கள் பற்றிய கூட்டங்கள் நடைபெற்றன. இவ்விரண்டு கூட்டங்களுக்கும் அங்கத்தினர்களிடமிருந்து எழுச்சிமிகு வரவேற்பைக் காண முடிந்தது. இதே உத்வேகத்தில் நமது சேம்பர் பல்வேறு முயற்சிகளுடன் செயல்படும் என்று உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அங்கத்தினர்கள் அனைவருக்கும் இனிய பொங்கல் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி

## SOURASHTRA CHAMBER OF COMMERCE
## BOARD OF MEMBERS
## YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |

**Advisors**

| | |
|---|---|
| K.K. Surendranath | 98409 88810 |
| T.K.D. Mohan | 98430 52530 |

**Patron Members**

| | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |


| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| K.K. Ramkumar | Member | 98421 40007 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. **குமரேஷ்** பாபு

**19.11.2024** – குஜராத் மாநில ராஜ்கோட் ஸௌராஷ்ட்ரா பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் டாக்டர். கமலேஷ் ஜொஷிபுரா அவர்கள் தம்பதியராக நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அலுவலகத்திற்கு வருகை தந்தார். இந்த நிகழ்வின் போது, ஆந்திர மாநில, I.P.S., அதிகாரி (ஓய்வு) திரு. K.R.M. கிஷோர் குமார், ஸௌராஷ்ட்ர மத்ய சபையின் முன்னாள் தலைவர் திரு. ஸ்ரீராம் சேகர் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் நவம்பர் மாத லாப் ஸமாச்சார் வெளியீடு செய்யப்பட்டது.

**27.11.2024** – ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் மூன்றாவது நிர்வாகிகள் கூட்டம் சேம்பர் வளாகத்தில் நடத்தப்பட்டது.

**03.12.2024** – டிசம்பர் மாத தொழில் வர்த்தக கூட்டம் சேம்பர் அரங்கில் நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில், சிறப்பு விருந்தினராக சைபர் க்ரைம் காவல் துறை ஆய்வாளர் திரு. S. செல்வகுமார், துணை ஆய்வாளர் திரு. C. ராஜா மற்றும் துணை ஆய்வாளர் (தொழில்நுட்பம்) திரு. R. சதீஷ் ஆகியோர் கலந்துகொண்டு பேசினார்கள். கௌரவ விருந்தினராக திரு. S.K.R. ரமேஷ் அவர்கள் கலந்து கொண்டார். இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமை தாங்கினார். செயற்குழு உறுப்பினர்கள் திரு. S.M. கார்த்தி குமரன் மற்றும் திரு. E.R.K. விக்னேஷ் பாபு ஆகியோர் ஏற்பாடு செய்தனர். சேம்பர் பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி தெரிவித்தார்.

**06.12.2024** – வரி வருவாய் சம்பந்தமான சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையிலான கூட்டத்தை நமது சேம்பர் மாலை 6 மணிக்கு சேம்பர் வளாகத்தில் ஏற்பாடு செய்திருந்தது. இந்த கூட்டத்தில் சிறப்பு விருந்தினர்களாக வரி வருவாய்த்துறை இணை ஆணையர் திருமதி. D. மாதுரி, I.R.S அவர்களுடன், வருவாய்த்துறை அதிகாரி திரு. R. சுரேஷ் கண்ணா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமை தாங்கினார். சேம்பர் பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி தெரிவித்தார்.

**07.12.2024** – ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் இரண்டாவது செயற்குழு கூட்டம் குற்றாலத்தில் நடைபெற்றது.



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. **விக்னேஷ்** பாபு

2024 நவம்பர் மாத லாப் ஸமாச்சார் இதழ் கடந்த 19.11.2024 அன்று நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் அலுவலகத்திற்கு வருகை தந்த குஜராத் மாநில ராஜ்கோட் ஸௌராஷ்ட்ரா பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் டாக்டர். கமலேஷ் ஜொஷிபுரா அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. உடன் அவரது இல்லத்தரசி திருமதி. பாவ்னா ஜொஷிபுரா அவர்களும் கலந்து கொண்டார். டாக்டர். கமலேஷ் ஜொஷிபுரா அவர்கள் நமது லாப் ஸமாச்சார் இதழின் தொடர் வாசகர் என்று குறிப்பிட்டது மிகவும் மகிழ்ச்சியளித்தது. நமது வணிக மாத இதழை மேன்மக்கள் ஆர்வத்துடன் ஒவ்வொரு மாதமும் படித்துவருவது நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-க்கு பெருமை சேர்க்கிறது.

நமது லாப் ஸமாச்சார் இதழில் தொழில்நுட்பம், மனிதவள மேலாண்மை, நிதி சார்ந்த தகவல்கள் இனி வரும் இதழ்களில் தொடர்ந்து வெளிவரும் என்று தெரிவித்தக்கொள்கிறேன்.

அங்கத்தினர்கள் நமது இதழ் குறித்த கருத்துக்களைத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

---

## திருக்குறள்

**கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின்**
**எற்றா விழுமந் தரும்**

**பொருள்:** செய்யப் புகுந்துவிட்ட ஒரு காரியத்தின் முடிவு காண அதைப் பூர்த்தி செய்வதுதான் ஆண்மை. இடையில் காரியத்தை நிறுத்திவிடுவது அக்காரியம் முடியாமற் போகக் கூடியபடி தீராத துன்பங்களை உண்டாக்கிவிடும்.

அதிகாரம் 67 | வினைத்திட்பம் (காரியத்தில் உறுதி) | அங்கவியல்

**Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account**

Name : Sourashtra Chamber of Commerce
Bank : State Bank of India
Acct. No. : 30134805614
Branch : Madurai City
IFSC : SBIN0011544

SOURASHTRA CHAMBER OF COMMERCE MADURAI

Exclusive Showroom for U'r Branded Products
IDEAL innerwear · ANAND · Viking · Prithvi INNER WEARS
NAIDU HALL THE FAMILY STORE · JOCKEY INNER WEAR · Poomex
MANGAI NIGHTIES · RASATHE DARLING NIGHTIES · YOKE'S NIGHTY
& All Branded Innerwears for All
Online Purchase for any Items Call 98941 41402 payments by G Pay PhonePe
Save Your Valuable Time, Money & Healthy Life.
THE BABY SHOP
அலங்கார் தி பேபி ஷாப்
உள்ளாடைகள் உலகம்
280, காமராஜர் சாலை, விளக்குத்தூண்,
மதுரை - 625 009. அலைபேசி : 98941 41402
HP பெட்ரோல் பங்க் எதிர்புறம், SR காம்ப்ளக்ஸ் பில்டிங்,
மீனாட்சி நகர், வில்லாபுரம்,
மதுரை – 625 012. செல் : 98941 41402

*Best Compliments from*

# BVK GROUP

Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation

4th Floor (NW), Kothari Building, 114, M.G. Road, Nungambakkam, Chennai - 600 034.
No.603, Keshava - BKC, Mumbai - 400 051.

# DIGITAL Crime Alert




சமீபத்தில், பாரதப்பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் மன்கீ பாத்-ல் 'டிஜிட்டல் அரெஸ்ட்' எனும் சைபர் கிரைம் சம்பந்தமாக பேசியிருந்தார். நாட்டில் தற்போது அதிகமாக நடந்து வரும் சைபர் குற்றங்கள் குறித்தும் அவர் கவலை தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ், டிஜிட்டல் மோசடி பற்றிய விழிப்புணர்வை மக்களிடத்தில் ஏற்படுத்த **டிஜிட்டல் க்ரைம் அலர்ட்** என்ற தலைப்பிலான கூட்டத்தை 03.12.2024 அன்று மாலை 6 மணிக்கு ஸௌராஷ்ட்ர சேம்பர் வளாகத்தில் ஏற்பாடு செய்தது.

இந்த கூட்டத்தில், சிறப்பு விருந்தினராக சைபர் க்ரைம் காவல் துறை ஆய்வாளர் திரு.S. செல்வகுமார், துணை ஆய்வாளர் திரு. C. ராஜா மற்றும் துணை ஆய்வாளர் (தொழில்நுட்பம்) திரு. R. சதீஷ் ஆகியோர் கலந்துகொண்டு பேசினார்கள்.



திரு. எஸ். செல்வகுமார் அவர்கள் பேசியதில், சைபர் குற்றங்கள் என்பது டிஜிட்டல் முறையில் பணம் சார்ந்த இழப்புகள் மட்டுமே அல்ல, பணம் அல்லாத, தவறான / ஆபாசமான தகவல்களை பகிர்தல், பேசுதல் போன்ற பல்வேறு விஷயங்கள் கூட சைபர் குற்றங்கள் என தெரிவித்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக "டாஸ்க் இன்வெஸ்ட்மெண்ட்" குற்றங்கள் அதிகப்படியாக நடந்து வருகின்றன, இந்த 2024 ஆம் ஆண்டில் மட்டும் 2500 குற்றங்களில் 1000க்கும் மேற்பட்ட குற்றங்கள் இந்த "டாஸ்க் இன்வெஸ்ட்மெண்ட்" - பண மோசடி குற்றங்கள் தான் அதிகமாக பதிவாகி உள்ளதாக தெரிவத்தார். அதோ போல, "லோன் ஆப்" பண மோசடி பற்றியும், தற்போது அதிகப்படியாக நடந்து வரும் "டிஜிட்டல் அரெஸ்ட்" சம்பந்தமான பண மோசடி குற்றங்கள் பற்றியும் விளக்கினார்.

இதுபோன்ற பல்வேறு விதமான டிஜிட்டல் பண மோசடிகளில் பொது மக்கள் தங்கள் பணத்தை இழக்க நேரிட்டால் **1930** என்ற எண்ணிற்கு 24 மணிநேரத்திற்குள் அழைத்தாலோ அல்லது சைபர் க்ரைம் தளத்தில் (www.cybercrime.gov.in) மூலம் புகார் அளித்தாலோ உடனடியாக இழந்த பணத்தை பெற முடியும் என்றார்.



அவரைத் தொடர்ந்து தொழில்நுட்ப ரீதியாக விளக்கம் அளிக்க திரு. C. ராஜா அவர்கள் பேசுகையில், சமூக வலைத்தளங்களில் நடக்கும், ஆபாச மற்றும் பரப்பப்படும் குற்றங்கள் குறித்துப் பேசினார். பலர் வாட்ஸ்ஆப், ஃபேஸ்புக் போன்ற சமூக வலைத்தளங்களில் வரும் தகவல்களை, உண்மையானதா? ஆபாசமானதா?, என்று பாராமல் பகிர்கிறார்கள். அப்படி தவறான தகவலை பகிர்ந்தால் அதுவும் ஒரு குற்றமாக கருதப்படும் என்று தெரிவித்தார்.

பிறகு, முகப்புத்தகத்தில் கணக்கு வைத்திருப்பவர்கள், தங்கள் கணக்கை "லாக்" செய்து வைத்துக்கொள்ள அறிவுரித்தினார். அதே போல வாட்ஸ்ஆப்-ல் உங்கள் புகைப்படத்தை உங்கள் அலையபேசியில் இருக்கும் தொடர்புகளுக்கு மட்டும் காணும் வகையில் மாற்றிக்கொள்ளவும் கேட்டுக்கொண்டார். இதனால் உங்கள் புகைப்படத்தை பாதுகாத்துக்கொள்ள முடியும். ஒவ்வொரு நாளும் உங்கள் ஈமெயில்-ஐ கவனிக்க வேண்டும். இதில் வரும் அலர்ட் மெசேஜ் மூலம் நீங்கள் உடனடியாக சுதாரித்துக்கொள்ள முடியும் என்று தெரிவித்தார்.

வளைத்தள முகவரிகள் முகவரிக்கு முன் http:// என்று ஆரம்பித்தால் அது நம்பகத்தன்மையற்றது. https:// என்று துவங்கும் வளைத்தளங்களே அதிகாரப்பூர்வமான உண்மையான வளைத்தளங்கள் என்று தெரிவித்தார்.



அவரைத் தொடர்ந்து பேசிய திரு. R.சதீஷ் அவர்கள், ஆப்-மூலம் மற்றும் வலைத்தளங்கள் மூலம் நடைபெறும் மோசடிகள் குறித்துப் பேசினார். நம்மிடம் இருக்கும் அலைபேசியை சர்வீஸ் செய்ய வேண்டும் என்றால் அலைபேசி நிறுவனம் சார்ந்த சர்வீஸ் சென்டர்-ல் தான் கொடுக்க வேண்டும், மாறாக பஜார்களில் கொடுத்து உங்கள் தகவல்கள் திருடுபோக இடம் அளிக்க வேண்டாம் என்று தெரிவித்தார்.

**இந்த QR Code-ஐ ஸ்கேன் செய்து நிகழ்ச்சியின் வீடியோவை காணலாம்**

# Members Interaction




நம் தனிப்பட்ட புகைப்படங்கள் சமூக விரோதிகளால் **morph** செய்து ஒரு முறை வெப்சைட்-ல் பதிவேற்றம் ஆகிவிட்டால் அதை தற்காலிகமாக மட்டுமே தடுக்க இயலுமே தவிர முழுமையாக ஒழிக்க முடியாது. ஆகவே நம் தனிப்பட்ட புகைப்படங்களை சமூக வலைத் தளங்களிலோ அல்லது அலைபேசியிலோ வைத்துக்கொள்வதை தவிர்ப்பது நல்லது என்றார். முக்கியமாக பெண்கள் இதில் கவனமாக இருக்க வேண்டும்.

நம்மை தொடர்புகொள்ளும் முகமறியா நபர் சைபர் குற்றவாளி என நாம் அறிந்து கொண்டு அந்த குற்றவாளி மீது புகார் அளிக்க வேண்டும் என்றால் www.sancharsaathi.gov.in என்ற மத்திய அரசின் தளத்தில் சென்று புகார் அளிக்கலாம் என்றார். பழைய மொபைல் ஃபோன்களை வாங்கியவர்கள், அந்த மொபைல் மீது இதற்கு முன் புகார்கள் உள்ளனவா என்று கூட இந்த தளத்தில் காண முடியும். இது போல இன்னும் பல பயன்பெரும் தகவல்கள் கொண்டது இந்த தளம். அனைவரும் இந்த தளத்திற்கு சென்று பார்க்க வேண்டும் என்றார்.

அதே போல தமிழ்நாடு அரசின் **காவல் உதவி** செயலியையும் ஒவ்வொருவரும் தங்கள் அலைபேசியில் வைத்திருக்க வேண்டும் என்றும், அதில் உள்ள பலன்கள் பற்றியும் விவரித்தார்.

நிகழ்ச்சியின் துவக்கத்தில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட ஸௌராஷ்ட்ரா சமூக நலப்பேரவை தலைவர் திரு. S.K.R. ரமேஷ் அவர்கள், சமூக நலப்பேரவையின் சேவைகள் மற்றும் செயல்பாடுகள் பற்றி விவரித்தார். டிஜிட்டல் மோசடி சம்பந்தமாகவும் பேசினார்.

மேலும் அவர், கணிணி, அலைபேசி இவை இன்றியமையாதவையாக வையகம் உருவாகியுள்ள நிலையில் அதனை பயன்படுத்தும் போது நாம் தான்



கவனமுடன் கையாள வேண்டும். நமது அனைத்து தகவல்களையும் நமது கணிணி அலைபேசி போன்றவற்றில் சேகரித்து வைத்திருக்கும்போது நாம் தான் விழிப்புடனும் பொறுப்புடனும் செயல்பட வேண்டும் என்றார்.

கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்து பேசி அங்கத்தினர்களின் கேள்விகளுக்கும் பதில் அளித்த சைபர் காவல்துறையினர் மூவரும் சேம்பர் சார்பாக சிறப்பாக கௌரவிக்கப்பட்டனர்.

அதோடு, கௌரவ விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்துப் பேசிய திரு. S.K.R. ரமேஷ் அவர்களையும் சேம்பர் கௌரவித்தது.

இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமை தாங்கினார். செயற்குழு உறுப்பினர்கள் திரு. S.M. கார்த்தி குமரன் மற்றும் திரு. E.R.K. விக்னேஷ் பாபு ஆகியோர் ஏற்பாடு செய்தனர். சேம்பர் பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி தெரிவித்தார்.

கூட்டத்திற்கு இரவு உணவு விருந்து ஏற்பாடு செய்த சேம்பர் வெளியுறவு தொடர்புகுழு ஒருங்கிணைப்பாளர் திரு. V.G. ராம்தாஸ், நன்கொடையாளர் திரு. K.R. ஸ்ரீதர், போஷக உறுப்பினர் திரு. T.L. துகாராம், சிறப்பு அழைப்பாளர்கள் திரு. N.R.R. கோபி, திரு. V.S. விஷ்ணுவர்தன், திரு. T.M. ஹேமநாத் மற்றும் திரு. T.H. ரவிகுமார் ஆகியோருக்கு சேம்பர் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

## சாம்பார் மகத்துவம்

நமது உணவு வகைகளில் ஒன்றான **சாம்பார்** கோலன் (மலக்குழாயின் கடைசி பகுதி) கேன்சர்-ஐ தடுக்க வல்லது என்று அமெரிக்க ஆராய்ச்சியில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இது பற்றிய மேலும் தகவல்கள் கூகுள் வளைத்தளங்களில் கூட தேடிப்பார்க்கலாம். – சதீஷ்











# வருமான வரி தொடர்பான சந்கேங்களுக்கு
# விளக்கமளிக்கும் கூட்டம்






வரி வருவாய் சம்பந்தமான சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கும் வகையிலான கூட்டத்தை நமது சேம்பர் 06.12.2024 அன்று மாலை 6 மணிக்கு சேம்பர் வளாகத்தில் ஏற்பாடு செய்திருந்தது. இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினர்களாக வரி வருவாயத்துறை இணை ஆணையர் திருமதி. D. மாதுரி,I.R.S., அவர்களுடன், வருவாத்துறை அதிகாரி திரு. R. சுரேஷ் கண்ணா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டம், Direct Tax Vivad Se Viswas (DTVSV 2024), Foreign Tax, Advance Tax and Income Tax act and Provisions ஆகிய நான்கு தலைப்புகளில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், அங்கத்தினர்களின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டதுடன் சில நமது கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டு தீர்வுகாண அரசுக்கு தெரியப்படுத்துவதாகத் தெரிவித்தனர்.

அதன்படி முதலாவதாக, அயல்நாட்டு வருமானம் சம்பந்தமாக பேசும்போது, இந்தியாவில் வசிக்கும் ஒருவர், வெளிநாட்டில் இருந்து தமக்கு வருமானம் வருமாயின், அதற்கு வருமான வரி கட்டத் தேவையில்லை. ஆனால், வருமான வரித்துறைக்கு வருமானம் குறித்து தெரியப்படுத்தினாலே போதுமானது. எனினும், அந்த வருவாயின் மூலம் ஏதேனும் அசையும், அசையா சொத்தினை இந்தியாவில் வாங்கி அதன் மூலம் ஈட்டும் வருமானத்திற்கு உரிய வரியை செலுத்த வேண்டும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் இதுபற்றிய பல்வேறு சந்தேகங்களுக்கும் பதிலளித்தனர்.

அதே போல, விவாத் சே விஸ்வாஸ்-ல் அங்கத்தனிர்கள் தாங்கள் சந்திக்கும் பிரச்சனைகளைப் பற்றித் தெரிவித்தனர். இது தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கமும் பெற்றனர்.

அட்வான்ஸ் டாக்ஸ் சம்பந்தமாக பேசும்போது, முன்கூட்டியே காலாண்டு வரி செலுத்தக்கூடியவர்கள், தங்களுக்கு வரக்கூடிய வரவுகளை நன்கு திட்டமிட்டு செலுத்தக் கேட்டுக்கொண்டனர். இதனால் வட்டி மற்றும் அபராதத்தைத் தவிர்க்கலாம் என்றனர்.

TDS, TCS மற்றும் வருமான வரி சம்பந்தமாக விளக்கம் அளித்தபோது, அங்கத்தினர்கள் TDS, TCS தொகையை நேரடியாக செலுத்தி வரும் நிலையில் வருமான வரித்துறை அதற்கான படிவங்களில் ஆடிட்டர் மூலமாக தாக்கல் செய்யாத பொழுது அதற்கான வட்டி மற்றும் அபராதம் விதிப்பதை தவிர்க்க வேண்டுமாய் கேட்டுக்கொண்டனர்.

அதேபோல, வருமான வரியில், ஒருவர் வருமான வரி தாக்கல் செய்யும் போது தமக்கு கிடைத்த வருமானங்களை தெரிவிப்பதற்கு ஒரு Remarks Column அளிக்கும் பட்சத்தில், தனி நபர் மற்றும் தொழில் நிறுவனங்கள் அதில் விளக்கம் அளிக்கும் பட்சத்தில் வருமான வரி அதிகாரிகளுக்கு வருமானத்தின் மீதான தேவையற்ற சந்தேகங்களுக்கு வழியிருக்காது. நாமும் நம்முடைய வருமான வரியை தெளிவுடன் அளிக்க உதவும் என்ற கோரிக்கைகளை அளித்தனர்.

அங்கத்தினர்களின், பல்வேறு கோரிக்கைகளை வருமான வரித்துறை அதிகாரிகள் ஏற்றுக்கொண்டனர். அதோடு, வருமான வரி 3.0-வில் பலரின் எதிர்பார்ப்பின்படியும், நமது சேம்பர் மூலமாக அளித்த கோரிக்கைகளையும் ஏற்று அதற்குரிய தீர்வு நமது மத்திய அரசு உருவாக்கி வருவதாக வருமான வரி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றியுரையாற்றினார். சேம்பர் பட்டயக் கணக்காளர் திரு. M.T. ஹரிஹரன் அவர்கள் இந்த நிகழ்ச்சி ஏற்பாட்டிற்கு உதவினார். சேம்பர் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறது.







## ராஜ்கோட் ஸௌராஷ்ட்ரா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர். கமலேஷ் ஜொஷிபுரா சேம்பருக்கு வருகை

குஜராத் ராஜ்கோட் ஸௌராஷ்ட்ர பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் முனைவர். கமலேஷ் ஜொஷிபுரா - பாவ்னா ஜொஷிபுரா ஆகியோர் தம்பதியராக நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் அலுவலகத்திற்கு 19.11.2024 அன்று வருகை தந்தனர். அவர்களை ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் வரவேற்றனர்.

உடன், ஆந்திர மாநில ஐ.பி.எஸ். அதிகாரி (ஓய்வு) திரு. K.R.M. கிஷோர் குமார் அவர்களும், ஸௌராஷ்ட்ர மத்ய சபையின் முன்னாள் தலைவர் திரு. ஸ்ரீராம் சேகர் அவர்களும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் தொழில் மற்றும் கலாச்சார பரிமாற்றம் குறித்து பேசப்பட்டது.

முக்கியமாக, என்.ஆர்.ஜி. உரிமை மற்றும் இரு மாநில தொழில் மேம்பாட்டிற்காகவும், கலாச்சார பரிமாற்றத்திற்கும் ஓர் இடம் மற்றும் கட்டடம் கட்டுவதற்கு குஜராத் மாநில அரசிடமிருந்து நிதியுதவி செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டது.

அரசிடம் இதனை முறையாக தெரிவித்து நிச்சயம் தமிழ் ஸௌராஷ்ட்ர மக்களுக்கும் குஜராத்-ற்கும் பந்தத்தை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்படும் என்று திரு. கமலேஷ் ஜொஷிபுரா மற்றும் பாவ்னா ஜொஷிபுரா ஆகியோர் உறுதியளித்தனர்.

இந்த கூட்டத்தின் போது, பேரா. கமலேஷ் ஜொஷிபுரா அவர்களின் பிறந்தநாளை, கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

அதோடு, 2024 நவம்பர் மாத லாப் ஸமாச்சார் இதழ் அவரது கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. அப்போது அவர், லாப் ஸமாச்சார் இதழின் தொடர் வாசகர் நான், என்று குறிப்பிட்டார்.

திரு. ஸ்ரீராம் சேகர் அவர்கள் பேசுகையில், சேம்பர் அங்கத்தினர்களின் தொழில் நலனுக்கு மற்றும் பிரச்சனைகளுக்குத் தேவையான உதவிகளை செய்வதாகத் தெரிவித்தார். திரு. K.R.M. கிஷோர் குமார் அவர்கள் இந்த இனிமையான சந்திப்பிற்கு தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் செயல்பாடுகளை பாராட்டிப் பேசினார்.

ஸௌராஷ்ட்ர சமூக அமைப்புகளின் நிர்வாகிகளும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

## நாள்காட்டிகள் சுட்டிக்காட்டும் ஆளுமைகள்

*- வீரஜா*

ஆங்கிலப் புதுவருடம் பிறக்கப்போகின்றது. பலருக்கு இது ஒரு சாதாரணமான சம்பிரதாயம். சில பேர்களுக்கு இது ஒரு சம்பவம். சொற்ப பேர்களுக்கு மட்டுமே இது ஒரு சகாப்தம்.

ஒவ்வொரு புத்தாண்டின் துவக்கத்திலும், அது, ஜனவரி 1 என இருக்கட்டும், சித்திரை 1 என்று ஆகட்டும், பாராளுமன்றம், சட்டப்பேரவைகளில், நிறைவேறும் தீர்மானங்களைவிட அதிகமாக தனிநபர்களிடம் தீர்மானங்கள், உறுதிமொழிகள், புதிய சட்டதிட்டங்கள் என தமக்குத்தாமே முன்மொழியப்படுகின்றன. இது எல்லா மொழியினர்களுக்கும் பொருந்தும்!. செயல்பாடுகள் பற்றி பிறகு கணக்கெடுத்தால், ஏமாற்றமே மிஞ்சும். ஏன் இந்த முரண்பாடு?

இதற்கு பதில், முதல்பத்தியை உன்னிப்பாக கவனித்தால், விளங்கும். சாதாரண சம்பவம், சகாப்தமாக மாறுவதில்லை. சாதனையாளர்கள் தான் சரித்திரம் படைக்கிறார்கள்.

முன்மொழிதலை எல்லா வழிகளிலும், வலிகளிலும்கூட, வழிமொழிந்தால், அதாவது ஆக்கப்பூர்வமாக செயல்பட்டால், வெற்றிக்கோட்டிற்கு அழைத்துச் செல்லும் என்பது திண்ணம்.

தினந்தோறும் காலையில், நாள்காட்டியில் முதல் நாள் தேதியை கிழிக்கிறோம். சற்று சிந்தித்துப் பார்த்தால், அதைக் குப்பைத்தொட்டியில் போடுவது போல நமது வாழ்க்கையும் ஆகி விடக்கூடாது என நமக்கு உள்மனதில் புலனாகும். நாள்காட்டிகள் நமக்கு உணர்த்தும் பாடங்கள் என்னென்ன?... அதில் இடம்பெற்றிருக்கும் வரலாறு படைத்த உத்தமப்புருஷர்களைப் பற்றி நாம் தெரிந்து கொண்டு, அதன்படி நம் பாதையை வகுத்துக்கொள்வது என்பது தானே.

அந்த புனிதப்பாதையில் சென்றால், நமது பெயர் பின்னாளில் நாள்காட்டியில் வருகிறதோ இல்லையோ, குறைந்தபட்சம், நம் சமூகம் மற்றும் சுற்றத்தார், நம்முடன் வாழ்ந்த அந்த நாள்களை அவர்கள் நினைத்துப் பார்த்தால் தான் நமது வாழ்க்கை முழுமையடைவதன் அர்த்தமாகும்.

இந்த ஆங்கிலப்புத்தாண்டில் அத்தகைய பேறு பெற, அனைவருக்கும் வாழ்த்துகள்.




# கைவினைக் கலைஞர்களைத் தொழில்முனைவோர்களாக உயர்த்திட **கலைஞர் கைவினைத் திட்டம்** திட்டத்தை பயன்படுத்திக் கொள்ள மாண்புமிகு குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் அழைப்பு

சமூகநீதி அடிப்படையில், தமிழ்நாட்டிலுள்ள கைவினைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையிலும், கைவினைஞர்களைத் தொழில் முனைவோர்களாக உயர்த்திடும் உன்னத நோக்கிலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. மு.க. ஸ்டாலின்** அவர்களின் உத்தரவின்படி **கலைஞர் கைவினைத்திட்டம்** என்ற பெயரில் தமிழ்நாட்டிற்கு என விரிவான திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இந்தத்திட்டம், குடும்பத் தொழில் அடிப்படையில் அல்லாமல், 25 கைவினைக் கலைகள் மற்றும் தொழில்களில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பு மக்களும் பயனடையும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் புதிய தொழிலைத் தொடங்குவதற்கும், செய்யும் தொழிலை நவீன வடிவில் விரிவாக்கம் செய்திடவும் கடன் உதவிகளும், திறன்மேம்பாட்டு மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்படும்.

கலைஞர் கைவினைத் திட்டத்தில் அதிகபட்சமாக ரூ. 50,000/- வரை 25 சதவீதம் மானியத்துடன் கூடிய ரூ. 3 லட்சம் கடனுதவியும், 5 சதவீதம் வரை வட்டி மானியமும் வழங்குவதோடு, தொழில் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் பயன்பெற குறைந்தபட்ச வயது 35 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மரவேலைப்பாடுகள், படகு தயாரித்தல், உலோக வேலைப்பாடுகள், பூட்டு தயாரித்தல், சிற்ப வேலைப்பாடுகள். கற்சிலை வடித்தல், கண்ணாடி வேலைப்பாடுகள், மண்பாண்டங்கள், சுடுமண் வேலைகள், கட்டட வேலைகள், கூடை முடைதல், கயிறு, பாய் பின்னுதல், துடைப்பான்கள் செய்தல், பொம்மைகள் தயாரித்தல், மலர் வேலைப்பாடுகள், மீன் வலை தயாரித்தல், தையல் வேலை, நகைசெய்தல், சிகையலங்காரம் மற்றும் அழகுக்கலை, துணி வெளுத்தல் தேய்த்தல், இசைக்கருவிகள் தயாரித்தல், துணி நெய்தல் மற்றும் துணிகளில் கலை வேலைபாடுகள் செய்தல், பாரம்பரிய முறையில் ஜவுளி அச்சிடுதல், பாசிமணி வேலைப்பாடுகள், மூங்கில் சணல், பனை ஓலை, பிரம்பு வேலைப்பாடுகள், ஓவியம் வரைதல், வண்ணம் பூசுதல், கண்ணாடி வேலைப்பாடுகள், சுதை வேலைப்பாடுகள், பழங்குடியினரின் இயற்கை சேகரிப்புகள் மற்றும் கைவினைப் பொருள்கள் உள்ளிட்ட 25 வகையான தொழில்களுக்குக் கடன் வழங்கப்படும். ஆண்டுக்குக் குறைந்தபட்சம் 10,000 கைவினைஞர்கள் பயன்பெறும் வகையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.



இத்திட்டத்தில் பயன்பெற www.msmeonline.tn.gov.in இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும். தகுதியான விண்ணப்பங்களை மாவட்டத் தொழில் மையத்தின் பொது மேலாளர்கள் தலைமையில் உள்ள குழு சரிபார்த்து, வங்கிகளுக்குப் பரிந்துரைக்கும்.

தமிழ்நாட்டில் உள்ள கைவினைக் கலைஞர்கள் இந்தத் திட்டத்தினை நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டு வாழ்வில் வளம்பெற வேண்டும் என மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள் அழைப்பு விடுத்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

செய்தி வெளியீடு எண்: 2157 / நாள்: 07.12.2024


Sowndarya Traders

Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

# சௌராஷ்ட்ரா கணக்கெடுப்பு

– நாகேஸ்வரன் சோமி *Ex. MD., ITCOT*
Director, Crispee Solutions Stratagic Consulting, Chennai.

2011 சென்சஸ்–ல் உள்ள 2.47 லட்சம் என்பது நமது சௌராஷ்ட்ரா நிஜ மக்கள் தொகையில் மிக சிறிய அளவே பதிவாகியுள்ளது. குறைந்தது 7 லட்சம் இருக்கலாம் என்பது 1891 சென்சஸ்–ல் 1.04 லட்சமாக என்ற அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. தாய்மொழி **சௌராஷ்ட்ரா** என்ற விழிப்புணர்வு இல்லாததால் பெரும்பாலானோர் பள்ளிகளில் படித்த தமிழ் மொழியை பதிவிடுவதும், நாம் சரளமாக தமிழ் பேசுவதால் அவர்களே தமிழ் என எழுதிவிடுவதை நாம் சரி பார்க்காமல் விடுவதும் நம் எண்ணிக்கை குறைவாக பதிவாக முக்கிய காரணங்கள்.

இதனால் நமக்கு நியாயமாக வரவேண்டிய அரசியல் பிரதிநிதித்துவம், அதிகாரம், சலுகைகள், கோரிக்கைகளுக்கு முக்கியத்துவம், கல்வி, வேலைவாய்ப்பு, சமூக அந்தஸ்து மிகவும் பாதிக்கப்படுகிறது. 2025–ம் ஆண்டு பள்ளி விடுமுறைநாட்களில் சென்சஸ் துவங்க அதற்குள் வீடு வீடாக தாய்மொழி சௌராஷ்ட்ரா என்ற தீவிர பிரச்சாரத்துடன், சென்சஸ் டவுண் வாரியாக எண்ணிக்கையும் எடுத்து சமூக மக்களை தயார்படுத்தி நிலைமையை இயன்றவரை 2025 சென்சஸ் சரி செய்ய உத்திகள் வகுக்கப்பட்டுள்ளதாக சௌராஷ்ட்ரா மத்ய சபையின் நவம்பர் 25, 2024 அறிக்கை தகவல் வெளியிட்டுள்ளது.

தீவிர பிரச்சாரத்தின் மூலம், தாய் மொழி என்பது, சென்சஸ் விதிகளின் படி, அம்மா குழந்தையிடம் பேசும் மொழி ; வீட்டுக்குள் குடும்பத்தினர் பேசிக்கொள்ளும் மொழி, அது பேச்சு வழக்கு மொழி, அதில் எழுத / படிக்க தெரிந்திருக்க வேண்டுமென்பது இல்லை. எனவே, சௌராஷ்ட்ரர் என்பதால் **தாய் மொழி பற்றிய கேள்விக்கு** தவறாமல், பெருமையுடன், குடும்பத்தினர் அனைவரும் **சௌராஷ்ட்ரா** என பதிவு செய்வதும். அப்படி சென்சஸ் கணக்கெடுப்பவர் வந்து கேட்கும்போது பதிவாகிறதா என உறுதி செய்து கொள்வதும் 2025 சென்சஸ்–ல் நம் தலைக்கணக்கை சரியான எண்ணிக்கை ஆக்கிவிடும் என்பதே சர்வே எடுப்பதின் மிக முக்கிய குறிக்கோளாகும்.

இதற்காக www.ambavatho.com என்ற இணையதளமும், நேரடியாக மொபைல் போன் மூலம் சர்வேக்கு செல்லவேண்டுமென விருப்பப்படுபவர்களுக்கு கியூஆர் கோடு வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சர்வே டிஜிட்டல் முறையில் கைபேசி / கம்ப்யூட்டர் வழியாக தரவுகளை செலுத்தி, மிக எளிய முறையில் உடனடியாக இந்தியாவெங்கும் பதிவாகும் தரவுகளை ஒரே மைய சர்வரில் உடனடியாக சேமிக்கும் விதமாக செலவு மிக குறைவானதாகும், விரைவானதாகவுமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

சர்வே மிக எளிமையான, ஆவணங்கள் ஏதும் தேவைப்படாது, வீட்டில் உள்ள யாரும் உடனே நான்கே நிமிடங்களில், தமிழில் பதில் சொல்லுமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

சென்னை மற்றும் பிற மாநிலங்கள் அனைத்திலும் முழுவதும் ஆன்லைன் முறையில் மக்கள் தாங்களே பதிவிடவேண்டும். சென்னை தவிர்த்து தமிழ்நாடு முழுவதும் அந்தந்த ஊர் சௌராஷ்ட்ரா சபை / அமைப்புகள் வீட்டுக்கு வீடு நேரடியாக சென்று சர்வே எடுப்பதாகவும், மதுரையில் நம் கல்லூரி மாணவர்களை விடுமுறைகளில் பயன்படுத்தி எடுப்பதாகவும் சபை திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில், வெளிநாடு வாழ் சௌராஷ்ட்ரர்கள் வராததால், சமீபத்தில் உலக சௌராஷ்ட்ரா சாதனையாளர் விருது நிகழ்ச்சி நிடத்திய பி.வி.கே. ஃபவுண்டேசன் Aborad Sourashtra Digital







Survey என ஆன்லைன் முறையில் ஆங்கிலத்தில் மட்டும் நடத்துகிறது. இதன் மூலம் ஒவ்வொரு நாட்டிலுள்ள எண்ணிக்கை தெரியவரும். தவிர, வயது குரூப் படி திட்டங்கள், வெளிநாடு குடியேறும் நம் இளைஞர்களுக்கான சமூக உதவிகள், வெளிநாட்டிலுள்ளவர்களுக்கு அவர்கள் குழந்தைகளுக்கும் சௌராஷ்ட்ரா மொழியை கற்றுத் தரத் தேவையான அடிப்படை தரவுகள், அவர்களுக்குள் பிராந்தியங்களில் ஒன்று கூடுதல், நாடுகளில் பதிவு பெற்ற சங்கங்களை அவர்களே அமைக்கும் சிந்தனை மற்றும் உலக நாடுகளில் உள்ள சமூக வலைதள தொகுப்பு என பல்வேறு துணை நோக்கங்களை தனி உரிமை தகவல்கள் இல்லாமல், நம் சமூகம் உலக அளவில் ஒன்றுபடவும், அந்தந்த நாடுகளில் அவர்களுக்கு கூடுதல் இணக்கத்தையும் தர வல்லது.

நம் சௌராஷ்ட்ர மக்கள் அனைவரும் அந்தந்த சர்வேக்களில் பங்குபெற்று சமூகம் மேம்பட வழி வகுப்பது சாலச்சிறந்ததாகும்.

## சர்வேயில் கேட்க்கப்படும் கேள்விகள்

*மற்றும்*

## சர்வேயால் கிடைக்கும் பலன்கள்

★ நம் மக்கள் தொகை தெரிவதுடன், சென்சஸ் டவுண் பிரகாரம் சர்வே தரவுகள் எடுப்பதால், ஊர் வாரியாகவும், சென்சஸ் தரவுகளுடன் ஒப்பிட்டு, நம் சமூக தலை கணக்கு சரிபார்க்க முடியும்.

★ வயது குரூப் – பாலகர்கள் / துவக்க & நடுநிலை பள்ளி மாணவர்கள் / உயர் நிலை & கல்லூரி / இளைஞர்கள் / அதிக பொறுப்புகள் கூடிய நிலை மற்றும் மூத்த குடிமக்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளதால், குறிப்பிட்ட வயது குரூப்புக்காக மேம்பாட்டு திட்டங்கள் வகுக்க வழிபிறக்கும்.

★ குடும்பத்திலிருந்து பெருநகர மற்றும் வெளிநாடு குடியேற்றம் மற்றும் சொந்த வீடு உள்ளதா இல்லையா என்கிற இரு மேலோட்டமான தகவல்கள் மூலம் சமூக பொருளாதார முன்னேற்றம் பற்றிய சில குறியீடுகள் கிடைக்கும்.

★ அனைத்திலும் வாய்ப்புகள் பெறாத குடும்பங்கள், ஊர் வாரியாக, தெரிவதன் மூலம் அரசு உதவிகள் அவர்களுக்கு கிடைக்க கோரும் தரவுகள் கிடைக்கும்.

★ நம் நிஜ மக்கள் தொகை மூலம், அரசியல் பிரதிநிதித்துவம், அதிகாரம், சமூக அந்தஸ்து மற்றும் நம் கோரிக்கைகள் வலுவுடன் பரிசீலிக்க நமக்கு வாய்ப்பளிக்கும்

ஆக இந்த தாய்மொழி சௌராஷ்ட்ரா சர்வே தலை கணக்குடன் நம் சமூகம் எல்லா வகைகளிலும் முன்னேற ஒரு அடிப்படையாக அமையும். சர்வே துவங்கும் தேதி பின்னர் அறிவிக்கப்படுமென்று கூறப்பட்டுள்ளது.

# *Important Update on*

# GSTR-9 Changes for FY 2023-24

**Major Change:** From FY 2023-24 onwards, Table 8A of GSTR9 will be based on GSTR-2B (NOT GSTR-2A).

**Query:** What happens if you claim ITC in March 2024 GSTR3B, but the invoice appears in April 2024 GSTR-2B (because the supplier uploaded it after 13th April 2024)?

**Scenario:** You claimed ITC in March 2024 GSTR-3B, so it will automatically appear in Table 6A of GSTR-9 for FY 2023-24. However, since the supplier uploaded the invoice on 14th April 2024, it won't appear in March 2024 GSTR-2B, and therefore it will NOT show in Table 8A of GSTR-9 for FY 202324.

It will instead be part of April 2024 GSTR-2B and will show in the Table 8A of FY 2024-25 GSTR-9.

**Treatment in GSTR-9 for FY 2023-24:**

- The claimed ITC will reflect in Table 6A of GSTR-9.
- The mismatch (since the invoice is not in Table 8A) will be reported in Table 8C, showing the difference between the ITC claimed and what's reflected in 2B.
- Provide reconciliation in Table 8D, explaining that the supplier uploaded the invoice late, and it will reflect in the next financial year.

**No ITC reversal required** – This is just a timing difference due to the new reporting method based on GSTR-2B. You're fully compliant as the ITC was validly claimed!

**Tip:** Keep proper documentation and explanations to reconcile the mismatch across both financial years.

**Good news for MSMEs:**

On 7th November 2024, the Ministry of Micro, Small and Medium Enterprises (MSMEs) issued a significant notification that mandates companies with a turnover exceeding Rs. 250 crore to onboard themselves onto the Trade Receivables Discounting System (TReDS) platform.

This move is part of the government's continued effort to enhance the liquidity of Micro, Small, and Medium Enterprises (MSMEs) by facilitating faster access to working capital.

**TReDS** aims to streamline receivables financing for MSMEs and boost liquidity. This move will increase transparency, speed up payments, and create growth opportunities across sectors.

Companies onboarded onto the Trade Receivables Discounting System (TReDS) platform must Faster Payment Cycles: These companies will now have to process payments for MSMEs in a more transparent and streamlined manner, leading to faster clearance of receivables.





MAHO JASE
IT Service
Comprehensive IT Partner
O.R. SURESH BABU
Co-Founder & Marketing Head
WEBSITE & SOFTWARE DEVELOPMENT
Websites | Mobile APP | E-Commerce
Starts From ₹5000/-
O.S. HIRAN RAM BABU
Co-Founder & CEO
DIGITAL MARKETING
Call Us
• Digital Marketing
• Social Media Management
• Poster Design
• Ads on Social Media
• WhatsApp Catalogue setup
OTHER SERVICES: IT Training, Guaranteed Career Support, College Projects, Student Internship, Presentation (PPT), MSME & UDAYAM Registration, Infrastructure Management Services
MAHO JASE IT
471, West 1st Cross St., KK Nagar, Madurai- 20.
+91-6379618513 | 0452-4991171
CHENNAI | MADURAI | TRICHY
info@mjit.in
www.mjit.in

# 2025ம் ஆண்டு பொது விடுமுறை

| வ. எண் | பொது விடுமுறை | தேதி | கிழமை |
|---|---|---|---|
| 1. | ஆங்கிலப் புத்தாண்டு | 01.01.2025 | புதன் |
| 2. | பொங்கல் | 14.01.2025 | செவ்வாய் |
| 3. | திருவள்ளுவர் தினம் | 15.01.2025 | புதன் |
| 4. | உழவர் திருநாள் | 16.01.2025 | வியாழன் |
| 5. | குடியரசு தினம் | 26.01.2025 | ஞாயிறு |
| 6. | தைப்பூசம் | 11.02.2025 | செவ்வாய் |
| 7. | தெலுங்கு வருட பிறப்பு | 30.03.2025 | ஞாயிறு |
| 8. | ரம்ஜான் | 31.03.2025 | திங்கள் |
| 9. | வங்கி க/கு முடிவு | 01.04.2025 | செவ்வாய் |
| 10. | மகாவீர் ஜெயந்தி | 10.04.2025 | வியாழன் |
| 11. | தமிழ் புத்தாண்டு | 14.04.2025 | திங்கள் |
| 12. | புனித வெள்ளி | 18.04.2025 | வெள்ளி |
| 13. | மே தினம் | 01.05.2025 | வியாழன் |
| 14. | பக்ரீத் | 07.06.2025 | சனி |
| 15. | மொகரம் | 06.07.2025 | ஞாயிறு |
| 16. | சுதந்திர தினம் | 15.08.2025 | வெள்ளி |
| 17. | கிருஷ்ணா ஜெயந்தி | 16.08.2025 | சனி |
| 18. | விநாயகர் சதுர்த்தி | 27.08.2025 | புதன் |
| 19. | மிலாதுநபி | 05.09.2025 | வெள்ளி |
| 20. | ஆயுதபூஜை | 01.10.2025 | புதன் |
| 21. | விஜயதசமி | 02.10.2025 | வியாழன் |
| 22. | காந்தி ஜெயந்தி | 02.10.2025 | வியாழன் |
| 23. | தீபாவளி | 20.10.2025 | திங்கள் |
| 24. | கிருஸ்துமஸ் | 25.12.2025 | வியாழன் |





## Available for Lease Rent

**Owner Name:**
M.K. Kaladhar Babu
Managing Director
Pandian Printpacks and Textile Mills Pvt. Ltd.,
Kappalur, Madurai - 625008

**GST No.:** 33AABCP0789M1Z4

**SIDCO Address:**
Shed No. 22A, SIDCO Industrial Estate, Kappalur, Thirumangalam Taluk, Palakkapudupatti Village, Madurai - 625008.

**Building Area:**
61.5' * 42.5' (2615 Sq.ft) with Galvanised (JSW) sheet roofed buildings

**Shed No.:** 5

**EB Power:** 104.8HP/105KW

Available for immidiate occupation.

**Contact Nos.**
99944 35350
99944 98090

நூற்றாண்டு கால பட்டு பாரம்பரியம்
**SRB SILKS HOUSE**
145,East Veli Street, Thavitusanthai, Madurai-1.
Cell : 92445 00633

**SRB FINSERVE PVT.LTD.**
B1, Sivagangai Road, Managiri,K.K.Nagar,Madurai.
(Opp: Aavin High Tech Parlour)
Cell : 90922 97702

**SRB RETAIL LLC.**
503, Gracelyn Way Lewis Center,
COLUMBUS, OHIO,43035.
Ph : +1 952 290 6405

**SRB MULTI PURPOSE HALL**
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar,Madurai.
Cell : 89039 29247

**EXPRESS BRIYANI**
Anna Nagar, South Marret St., Kalavasal.
Cell : 97901 59015, 72007 26300

**KEESHTU BOLI & SNACKS**
East Gate - Kalavasal - Navabathkana Street, Madurai.
Cell : 81243 45000

**SRB CATERING**
135, 2nd East Main Road, Anna Nagar, Madurai.
Cell : 89398 97500

**SWASI NATURO CURE HOSPITAL**
ஆயுர்வேதம் – பஞ்சகர்மா – பாதகூஸா, வர்மா மருத்துவம்
S.R.B.Complex, 392, Anna Nagar, Madurai.
Cell : 95977 48952

**S.R.B.KISHORILAL ★ S.R.B.MADANLAL**
**S.R.B.ARUNLAL**

OM SHANTI
ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
**Prof. Dr. M.V. SUBBURAMAN**
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga),
M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)
Cell: 90805 54802, 99424 90217



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University
(Retd. HOD of Hindi, The American College, Madurai).

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

*With best compliments from*

## Kfam Group of Companies

## Pandian Surfactants Private Limited

Manufacturers Representative for



**K.K.Dinakaran**
Chairman & Director

Godrej — Chemical Division

IFF — Perfumes & Fragranaces

INDORAMA — Speciality Chemicals

## Kfam Micro Products Private Limited

Manufacturers of Speciality Chemicals &
Consumer Products

Micro Sol — Perfect Cleaning for Future Life



## Kfam Micro Polymers

Manufacturers of Blow Moulding & Injection Moulding Products



Regd. Office : **Pandian Surfactants Private Limited**

**Shed No.57/62, (NP) Sector 1, 3rd Street, Ambattur Industrial Estate,**
**SIDCO Industrial Estate, Pattaravakkam, CHENNAI-600 098.**
**Email : dinakaran@pfpl.in Kishan@pfpl.in www.pandiansurfactants.com**

**Branches** | **Chennai** | **Madurai** | **Hyderabad** | **Bangalore**

# மனிதவள மேலாண்மை ஒரு பார்வை

ராம்கி: ஹாய் கிருஷ்

கிருஷ்ணன்: ஹாய் ராம் ததா, பாத்து ரொம்ப நாளாச்சு எப்படி இருக்கீங்க? வீட்ல எல்லாரும் சௌக்கியமா?

ராம்கி: எல்லாரும் நல்லா இருக்கோம்டா, நீ எப்படி இருக்க உங்க வீட்ல எல்லாரும் நல்லா இருக்காங்களா?

கிருஷ்ணன்: நல்லா இருக்கோம் ததா, நீங்க அதே பிசினஸ்ல தானே இருக்கீங்க?

ராம்கி: ஆமாம்பா அதே பிசினஸ் தான்

கிருஷ்ணன்: எப்படி போயிட்டு இருக்கு, பிசினஸ்

ராம்கி: ரொம்ப நல்லா போயிட்டு இருக்கு நீ என்ன பண்ணிட்டு இருக்க இப்ப?

கிருஷ்ணன்: நான் ஒரு கம்பெனில வேலை பார்த்துட்டு இருந்தேன் ததா இப்ப நானே புதுசா ஒரு கம்பெனி ஆரம்பிச்சு ஒரு வருஷமா ஓட்டிகிட்டு இருக்கேன்.

ராம்கி: எப்படி போகுது?

கிருஷ்ணன்: சூப்பரா போகுது, ஆனா, இந்த வேலையாட்கள் பிரச்சினை தான் பெருசா இருக்கு, மெயின்டைன் பண்ண முடியல. விசுவாசம் அப்படிங்கற வார்த்தையை காணாமல் போய்விட்டது போயிருச்சு. முதலாளியை மதிக்கக் கூட மாட்டேன் என்கிறான். உங்க கம்பெனியில் எப்படி ததா வேலையாட்கள் பிரச்சனை எல்லாம் வராதா?

ராம்கி: முன்னாடி ரொம்ப வந்துட்டே இருந்தது இப்ப அந்த மாதிரி அவ்வளவா வர்றதில்ல.

கிருஷ்ணன்: என்ன செஞ்சீங்க ததா?

ராம்கி : முதல்ல உனக்கு பிரச்சனை என்ன அப்படின்னு சொல்லு தம்பி?

கிருஷ்ணன்: ஒன்னா ரெண்டா எல்லாமே தான். வேலைக்கு ஆளே கிடைக்கிறது இல்ல. கிடைச்சாலும் உருப்படியான ஆளா கிடைக்காது. வந்தவன் ஒழுங்கா வேலை பார்க்க மாட்டான். அப்புறம் பாதியிலேயே ஓடி போயிருவான். இவ்வளவு பிரச்சனை இருக்கு. இவ்வளவும் சமாளிக்கறதுக்குள்ள போதும் போதும் ஆகிருது.

ராம்கி : தம்பி போதும்டா புலம்புறத நிப்பாட்டு, இதெல்லாம் ஒரு பெரிய மேட்டரே கிடையாது. ஈசியா ஹேண்டில் பண்ணலாம்.

கிருஷ்ணன்: ப்ரோ... என் கஷ்டம் எனக்கு, நீங்க கூலா சொல்றீங்க, நீங்க எப்படி சமாளிக்கிறீங்க? உங்களுக்கு இந்த பிரச்சனை எல்லாம் கிடையாதா?

ராம்கி : எல்லாருக்கும் பிரச்சனை வரத்தான் செய்யும். நாம தான் சூதானமா கையாளனும். எனக்கும் ஆரம்பத்துல நிறைய இருந்தது இப்ப அதிகமா வராத அளவுக்கு அமைப்பை உருவாக்கிட்டேன்.

கிருஷ்ணன்: கொஞ்சம்... என்ன செய்யணும்னு சொல்றீங்களா?

ரா கி : இப்பல்லாம் எல்லா நிறுவனங்களும் அவங்க வணிக மாதிரிகளின் அடிப்படைல செயல்படுறாங்க. மனித வள மேலாண்மையின் அடிப்படை கோட்பாடு “ரைட் மேன் ஃபார் தி ரைட் ஜாப்”.

கிருஷ்ணன்: அப்படின்னா?

ராம்கி : சரியான வேலைக்கு சரியான ஆள். முதல்ல சரியான ஆள வேலைக்கு எடுக்கணும்.

கிருஷ்ணன்: முதல்ல ஆளே கிடைக்க மாட்டேங்குறாங்களே ப்ரோ, எங்க போய் சரியான ஆளை தேடுவது. அதுதானே பிரச்சனையே.

ராம்கி : ப்ரோ இதெல்லாம் ரொம்ப சிம்பிள். நான் உனக்கு பொதுப்படையா சில வழிமுறைகளை சொல்றேன். அதுல உனக்கு எது செட் ஆகமோ அதை தேர்ந்தெடுத்துக்கோ.

கிருஷ்ணன்: சொல்லுங்க ப்ரோ.

ராம்கி : முதல் வழி **Employee referral** அதாவது பணியாளர் பரிந்துரைகள். அதை முயற்சி பண்ணி பார்க்கலாம். ரொம்ப எளிய வழி நாம் எங்கேயும் தேடி அலைய தேவையில்லை. அவங்களே நல்ல ஆளா தேடி குடுப்பாங்க சில வேலைகளில் அவங்கள விட நல்ல ஆள பிடிச்சு கொடுத்துடுவாங்க. நாம் ஏதாவது ஊக்குவிக்கும் விதமாக பணமாகவோ அல்லது ஏதாவது பரிசாகவோ கொடுக்கலாம்.

கிருஷ்ணன்: அதுதான் எனக்கு தெரியுமே

ராம்கி : இரண்டாவது பதவி உயர்வு. நல்ல வேலை பாக்குறவங்களை உயர் பதவிக்கு கொண்டு போகணும் அப்ப வந்து உயர் பதிவியில் உள்ள காலியிடங்களுக்கு நம்பிக்கையான ஆள் கிடைத்து விடும். அப்படிப்பட ஒருவரை “சக்சஸ் பிளானிங்” என்ற முறையில் தேர்ந்தெடுத்து மேம்படுத்திக் கொண்டு போக வேண்டும். அதற்கு “மேன் பவர் பிளானிங்” என்கிற மனிதவள திட்டமிடல் வேண்டும்.

கிருஷ்ணன்: இதுதான் தெரிஞ்ச விஷயம் ஆச்சே.

ராம்கி : அடுத்தது சமூக ஊடகங்கள் **LinkedIn, Facebook, Twitter, Instagram** ஏன் **WhatsApp** கூட பயன்படுத்தலாம்.

கிருஷ்ணன்: இது எல்லாருமே சொல்றதுதான் நீங்க மேல சொல்லுங்க.





VEDHAVALLI
HOLIDAYS
BALI
Honeymoon
Memorable Romantic Trip in Bali with
Vedhavalli Holidays
5N / 6D
INCLUSIONS
• Roundtrip Airfare Included
• 5N Accommadation in Hotels
• Daily Breakfast & Dinner
Vedhavalli Holidays
Kamarajar Salai-Madurai | Palayamkottai Tirunelveli
99430 31237

ராம்கி : ஜாப் கன்சல்டன்ட் என்கிற ஆட்சேர்ப்பு முகவர் மூலமாக சரியான ஆள எடுக்க முடியும். என்ன... கொஞ்சம் கமிஷன் கொடுக்கணும்.

கிருஷ்ணன்: ஒரு மாச சம்பளம் கமிஷன் கேக்குறாங்க

ராம்கி : வேலை இணையதளங்களில் விளம்பரம் செய்யலாம். குறைந்த விலை தான். உதாரணத்திற்கு **naukri.com** ரூ. 400/– தான் ஒரு விளம்பரம். அதுபோக **Jobanya, Nithra Jobs** மற்றும் **Kaigal** வேலை இணையதளங்களில் இன்னும் குறைந்த விலையில் விளம்பரம் செய்யலாம். இந்த போஸ்டர் அடிக்கிறது, நியூஸ் பேப்பர்ல கிளாசிஃபைடு காலத்துல விளம்பரம் கொடுக்குறது, ஏன் பிரிண்ட் அவுட் எடுத்து அட்டையில் எழுதி தெருவிளக்கு கம்பத்தில், கம்பெனி வாசலில் தொங்கவிடறது போல விளம்பரம் செய்யலாம்.

கிருஷ்ணன்: அப்படியா!

ராம்கி : கம்பெனி வாசலில் ‘விளம்பரம்’ அப்படின்னு சொன்ன உடனே ஒன்னு ஞாபகம் வருது. எங்க வீட்ல ஒரு போர்ஷன் காலிய இருந்துச்சு. நான் புரோக்கர் கிட்ட எல்லாம் சொல்லிட்டேன். வாடகைக்காக, ஆறு மாசமா யாருமே வரல அப்புறம் ஒரு நாள் யோசிச்சு இந்த மாதிரி பிரிண்ட் அவுட் எடுத்து அட்டையில் ஒட்டி வீட்டு வாசல்ல தொங்க விட்டேன் ஒரே வாரம்தான் ஒரு 30 போன் வந்திருக்கும். அதுக்கப்புறம் ஒரு குடும்பமே கூடி வந்துருச்சு.

கிருஷ்ணன்: சூப்பர் ப்ரோ... மேல சொல்லுங்க...

ராம்கி : அடுத்தது கேம்பஸ் இன்டர்வியூ என்று சொல்லக் வடிய வளாக ஆள் சேர்ப்பு முறையை முயற்சி செய்து பார்க்கலாம். அல்லது கல்லூரியில் வேலை பார்க்கும் தெரிந்த ஆசிரியர்கள் மூலமாக படித்து முடித்த மாணவர்களை சிபாரிசு பண்ண சொல்லி தேர்ந்தெடுக்கலாம்.

கிருஷ்ணன்: நீங்க சொன்னதுல முக்கால்வாசி வழிகள் செஞ்சு பார்த்துட்டேன். அதுல பாதி பேருக்கு மேல ஓடி போயிடுறானே என்ன பண்றது.

ராம்கி : அவசரப்படாத. இதுவரைக்கும் நான் சொன்னது, எப்படி ஆள தேடறது என்பது தான். வேலைக்கு சேர்க்கணும்னு சொல்லல. வேலைக்கு சேர்க்கும் போது சரியான ஆள தேர்ந்தெடுக்கணும்.

கிருஷ்ணன்: அது எப்படி சரியான ஆளு தேர்ந்தெடுக்கிறது?.

ராம்கி : இவன் அதுக்கு சரிப்பட்டு வருவானா? அப்படின்னு பாக்கணும்

கிருஷ்ணன்: ப்ரோ... காமெடி பண்ணாம விவரமா சொல்லுங்க ப்ரோ

ராம்கி : நான் சரியா தான்பா சொல்றேன். அங்க பாரு சிவா வருகிறான். அவன்கிட்ட கேளு இன்னும் விவரமா சொல்லுவான். ஹாய் சிவா.

கிருஷ்ணன்: ஹாய் சிவா ப்ரோ

சிவா: ஹாய் ராம், ஹாய் கிருஷ்ணன், லாங் டைம் நோ சீ எப்படிடா இருக்க.?

– தொடரும்.

**- K.S.Ashwath Babu Kuduva**
HRD Consultant & Soft Skills Trainer
Contact: 98421 89551

## இந்தியாவின் ஏற்றுமதி புதிய உச்சம்!

இந்தியாவின் ஏற்றுமதி 67% அதிகரித்து, 2013–14ல் 466 டாலர் பில்லியனில் இருந்து 2023–24ல் 778 டாலர் பில்லியனாக உயர்ந்தது. இது உலக வர்த்தகத்தில் இந்தியாவின் பங்கை எதிரொலிக்கிறது.

## மழை நீரை சேமிப்பீர்!

**இது மழைக்காலம்...**

## சாலையில் கவனமாக செல்லவும்!!









Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

JSW COLOURON+ கூரைகள்

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்






ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj®

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

Trust us with all your Electrical Plumbing and Agri needs...




மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

VIGNESH GRAPHICS

*All Kinds of Printing Solution*




- ★ Brouchers
- ★ Wedding Cards
- ★ Souvenirs & Directories
- ★ Visiting Cards

Head Office : 79-A, South Marret Street, Madurai - 625 001.

Branch : No. 33, Manjanakara Street, Madurai - 625 001.

Branch : Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.

O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com

- ★ Letter Pads
- ★ Shopping Bags
- ★ Paper Bags
- ★ Menu Cards

உங்கள் உடல் எடையை பராமரிக்க குறைக்க / அதிகரிக்க விரும்புகிறீர்களா?

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

ஆலோசனை பெற அணுகவும்

L.N.R. தாமோதரன் - 98431 71477

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2022-2024
Printed Matter

Date of Posting : 20.12.2024 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2022 - 2024
Date of Publication 20th of Every Month

0452 231 2293 98409 60846 / 90479 50885


UG CHEMI JAGSAN
U G கெமி ஜாக்சன்



(Innovators in Construction Admixtures &
Promoters of Geo Polymer Concrete - Concrete without Cement)
5A, New No : 17, Room No : 3, Pankajam Colony 4th Cross Street Madurai:625 009
E mail : info@ugchemijagsan.com / Web : www.ugchemijagsan.com



வேல் மருத்துவமனை
வேல் சிறப்பு எலும்பியல் மையம்
Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement
VALE HOSPITAL
45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com
Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.
24hrs Service





சிறப்பம்சங்கள்
- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்
- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

Right Treatment is Everyone's Right




Official Publication:
SOURASHTRA CHAMBER OF COMMERCE
136, East Veli Street, II Floor, Madurai - 625009
Call: 0452 2629955 / 93441 97952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.com